

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தியாகி டி.எஸ்.அருணாச்சலம் அவர்களின் 116 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மெயின்கார்டு கேட் பகுதியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,மாநகர மேயர் அன்பழகன். மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், சேர்மன் துரைராஜ், காங்கிரஸ் மாமன்ற உறுப்பினர் ரெக்ஸ், காங்கிரஸ் முன்னாள் மாவட்டத் தலைவர் ஜெரோம் ஆரோக்கியராஜ், மதிமுக வெல்லமண்டி சோமு, குடமுருட்டி சேகர், பட்டையார் ரமேஷ் கதிர்வேல் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அருணாச்சலம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 6 புதிய பேருந்து வழித்தட சேவைகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 15.12.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, துணை மேயர் எம்.லியாகத் அலி, பொது மேலாளர் (கு.அ.போ.க.) கே.முகமதுநாசர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### பீகார் வேறு தமிழ்நாடு வேறு – தமிழ்நாட்டில்

# திராவிட இயக்கம் தவிர வேறு எந்த இயக்கமும் காலூன்ற முடியாது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச.17-

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் புறநகர் மற்றும் நகரப் பகுதிகளுக்குச் செல்ல ஏழு புதிய பேருந்து சேவைகளை மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மேலும் இதில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அப்போது புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் ஊசிமணி பாசிவிற்கும் ரெங்கம்மாள் சத்திரத்தைச் சேர்ந்த நரிக்குறவன இன மக்கள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினருக்கு ஊசிமணி பாசிகளை அணிவித்து வீடு கட்டுவதற்கு அரசு கொடுக்கும் நிதி பற்றவில்லை. அதனை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். உடனடியாக அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியரிடம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.



அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

முன்கூட்டியே விருப்பமனுவை அ.தி.மு.க. வாங்கி அவர்கள் கட்சியில் நிற்பதற்கு ஆள் இருக்கிறார்களா என்று பார்க்கிறது, கட்சியை விட்டு யாரும் சென்று விடக்கூடாது என்பதற்காகத் தான் முன்கூட்டியே விருப்பமனு வாங்குகிறார்கள். இதுதான் அவர்கள் விருப்பமனு வாங்குவதற்கு அடிப்படை காரணம்.

யாராக இருந்தாலும் நாங்கள் அன்பாகத்தான் நடந்து கொள்வோம். யாரிடமும் எதிர்ப்பு வெறுப்பு காட்டுக்கிற கட்சி நாங்கள் கிடையாது. எல்லோரையும் தோழமையோடு அரவணைக்கின்றவர்கள் தான் நாங்கள். கொள்கை மாறுபாடு தானே தவிர வேறு எந்த விதத்திலும் யாரையுமே நாங்கள் தொந்தரவு செய்பவர்கள் அல்ல.

திராவிட மாடல் ஆட்சியை ஏற்றுக்கொண்டால் யாருடனும் இணைந்து பணியாற்ற தயாராக இருக்கின்றோம்.

உதயநிதி ஸ்டாலின் இந்த இயக்கத்திற்கு வலுவூட்டக்கூடியவர் என்ற நம்பிக்கையில் அனைவரும் இருக்கிறார்கள். உதயநிதியை தலைமையாக ஏற்றுக் கொள்வதில் எந்த தவறும் கிடையாது. தலைவர் அடுத்து இளம் தலைவர் உதயநிதி அவர்கள் தான்.

**தமிழ்நாட்டிற்கு படை எடுத்து தான் வர வேண்டும்!**

ஏற்கனவே சேலத்தில் 15 லட்சம் இளைஞர்களை ஒன்று திரட்டி இளைஞரணி மாநாட்டை நடத்தினோம். இளைஞர்கள் தி.மு.க.வில் தான் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் சேலத்தில் நடத்தப்பட்ட மாநாடு என்பதை யாரும் மறந்து விட முடியாது. மண்டலம் வாரியாக ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே இளைஞரணி மாநாடுகள் நடத்தப்பட்டது. அதன்படி திருவண்ணாமலையில் ஒன்றரை லட்சம் இளைஞர்கள் மட்டுமே கலந்து கொண்ட மாநாடு.

அமித்ஷா, மோடி ஆகியோர் தமிழ்நாட்டிற்கு இனி படையெடுத்து தான் வர வேண்டும். தங்கள் கட்சியுடைய டெபாசிட்டை யாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அமித்ஷவும் மோடியும் தமிழ்நாட்டிற்கு படையெடுத்து வரத்தான் வேண்டும். ஆனால் எந்த பணமும் அவர்கள் கொண்டு வர மாட்டார்கள். நம்ம பணத்தையும் அவர்கள் வைத்துக் கொள்கிறார்கள் மற்ற மாநிலத்திற்கு அவர்கள் செலவு செய்கிறார்கள். நம்ம பணத்தை மற்ற மாநிலங்களுக்கு செலவு செய்கின்றவர்கள் தான் அவர்கள் தவிர இப்ப எந்த பணத்தையும் தருவதில்லை.

**தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது!**

பீகார் வேறு தமிழ்நாடு வேறு. தமிழ்நாட்டில் வேறு எந்த இயக்கமும் காலூன்ற முடியாது. இது திராவிட இயக்கத்துடைய வரலாற்றுச் சிறப்புமிக்க பூமி. ஆரம்ப காலத்தில் இருந்தே திராவிட இயக்கத்தை ஊட்டி ஊட்டி வளர்த்த பூமி. இங்க இருக்கக்கூடிய தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. ஆன்மீக அரசியலை சொல்லி எல்லாம் ஏமாற்ற முடியாது. நாங்கள் ஆன்மீக அரசியலுக்கு எதிரிகள் அல்ல. தமிழ் உணர்வு உள்ள அத்தனை வாக்காள மக்களுக்கும் நன்றாக தெரியும். எங்களைப் பொறுத்த வரை எல்லோரும் ஒன்று எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் எங்களுடைய கொள்கை. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. எல்லோரும் சமம் என்பது தான் எங்களுடைய கொள்கை. எல்லோரும் சமம் என்று ஏற்றுக் கொண்டு அவர்கள் வந்தார்கள் என்றால் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. எல்லோரையும் சமமாக அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். எதிரி உதிரி எல்லாம் அவர்கள் தான்.

இளைஞர்கள் முதியவர்கள் என கட்சியில் உள்ள அனைவருக்கும் சம உரிமை கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இளைஞர்களும் வரவேண்டும் அல்லவா. கட்சியை பலப்படுத்த இளைஞர்கள் தேவைதான். இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்பது இளைஞர் அணி செயலாளருக்கு உரிமை உண்டு. அவரது உரிமையை அவர் கேட்கிறார்.

எஸ்.ஐ.ஆர். பணி முடிவடைந்துள்ள நிலையில் வாக்காளர் பட்டியல் வெளி வந்த பிறகு தான் என்னென்ன நடந்திருக்கிறது என்பது தெரியவரும். விடுபட்ட வாக்காளர்களை சேர்ப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. தி.மு.க. களப்பணியில் முதல் இடத்தில் இருக்கும். ஒரு வாக்காளர்கள் விடாமல் அ.தி.மு.க.வா, பா.ஜ.க.வா, தி.மு.க.வா என எதை பற்றியும் கவலைப்படாமல் அனைவரையும் வாக்காளர்களாக சேர்க்கின்ற கட்சி தான் திமுக. எங்க கட்சியின் மட்டும் நாங்கள் சேர்க்க மாட்டோம் அனைத்துக் கட்சியினரையும் சேர்ப்போம்.

காவிரி வைகை, குண்டாறு இணைப்பு திட்டத்திற்கு முதன் முதலில் மாயனூரில் அணைக் கட்டியது தி.மு.க. அரசு தான். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அந்த திட்டத்தை முறையாக செய்யாமல் அறிவிப்பை செய்துவிட்டு சென்றுவிட்டனர். தற்போது நிலத்தை கையகப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் பேசி தான் நிலத்தை கையகப்படுத்த வேண்டிய சூழல் இருக்கிறது. காவிரி வைகை குண்டார் இணைப்பு திட்டத்திற்கு நிதி ஒதுக்கவில்லை என்று கூறி முன்னாள் அதிமுக அமைச்சர் விஜயபாஸ்கர் உண்ணாவிரதம் உள்ளிட்ட எது வேண்டுமென்றாலும் இருக்கட்டும். அவர் பொது மக்களிடம் பேசி நிலத்தை கையகப்படுத்தி கொடுக்கட்டும்.

**வேறு எதுவும் செய்ய வில்லை!**

திமுக அரசு வந்த பிறகு தான் மக்கள் நல்வாழ்வு துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் விஜயபாஸ்கர் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தபோது அந்த துறைக்கு பெயிண்ட் மட்டுமே அவர் அடித்தார் வேறு எதுவும் செய்ய வில்லை என்று தெரிவித்தார்.




கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் பா.விக்னேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற மிஸ்டர் உதயநிதி கிளாசிக் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கோப்பை, ரொக்கப் பணம், சான்றிதழ்களை கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி வழங்கினார். இதில் மேட்டுப்பாளையம் தொகுதி பார்வையாளர் மு.ஜெயக்குமார், கூடலூர் நகர் மன்ற தலைவர் அறிவுரசு, கோவை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹக்கீம், துணை அமைப்பாளர் சூரியன் தம்பி, கோவை வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் தேர்வுநிலை பேரூராட்சி, கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலை, பர்கூர் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அருகில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 202526 கீழ், ரூ.4 கோடியே 39 இலட்சம் மதிப்பில் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன் பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன் , அறிஞர் செயல் அலுவலர் குமார் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் உள்ளனர். கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.

# ஓய்வூதிய சீர்திருத்தங்களின் காலக்கெடுவில் குழப்பம்!

## மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் ஒத்திவைப்பு தீர்மானம்!

புதுடெல்லி, டிச. 17-

நாடாளுமன்ற மக்களவையில் மிகவும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டவட்டமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்காக, சபை அவை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தை வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தாக்கல் செய்ததன் விபரம் வருமாறு:

வேலையின்மை, மருத்துவ அவசரநிலைகள் மற்றும் பொருளாதார அழுத்தத்தின் போது அத்தியாவசிய நிதி நிவாரணம் போன்ற EPF திரும்பப் பெறுதல் மற்றும் முன்பணக் கோரிக்கைகள் ஆதார்UAN பொருந்தாத தன்மை, பணியாளர் சரிபார்ப்பு குறைபாடுகள், CPCS இடர்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான EPFO போர்டல் செயலிழப்புகள் காரணமாக சட்டப்பூர்வ 20 நாள் காலக்கெடுவைத் தாண்டி தாமதமாகி வருவது வருத்தமளிக்கிறது.

ஒன்றிய அரசின் சமீபத்திய முடிவு, முழு EPF திரும்பப் பெறுதலுக்கான வேலையின்மை காத்திருப்பு காலத்தை 2 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகவும், EPS திரும்பப் பெறுதலை 2 மாதங்களிலிருந்து 36 மாதங்களாகவும் உயர்த்தியதால், அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் பணவீக்கம் காரணமாக லட்சக் கணக்கான வேலை தேடும் குடும்பங்கள் தங்கள் சொந்த சேமிப்புகளை அணுகி பெற முடியாமல் தவிக்கின்றன.



இது கோடிக்கணக்கான EPF சந்தாதாரர்கள் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது, அவர்கள் போர்டல் செயலிழப்புகள், காலாவதியான பாஸ்புக்குகள், KYC பிழைகள் மற்றும் 2025-26 நிதியாண்டி ற்கான EPF வட்டி விகிதம் அல்லது 15,000 ஊதிய உச்சவரம்பை நீக்குதல் போன்ற EPS ஓய்வூதிய சீர்திருத்தங்களு க்கான காலக்கெடு குறித்து தெளிவின்மை ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர்.

எனவே, தேசிய அளவில் மிகவும் கவலைக்குரிய இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கதிர் ஆனந்த் மக்களவையில் சபை ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

# துறைமுகம் தொகுதியில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை,டிச.17–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 299 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (15.12.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60 அ, அன்னை சத்யா நகர், B.C பகுதி. 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54அ, உட்வார்ப், 1வது கேட், வால்டாக்ஸ் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இது தான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம். விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி. கதிரவன் (ஏ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ் குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம.அசோக் குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை வார்டு பகுதிகளுக்கு கழிவு நீர் தொட்டி அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், அம்மாப்பேட்டை மண்டல குழுத்தலைவர் கே.டி.ஆர்.தனசேகர் ஆகியோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூரில் நடைபெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம். ராஜு மற்றும் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் உயர்நிலை செயல்த்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், அரசு கொறடா கா. ராமச்சந்திரன், குன்னூர் நகரச் செயலாளர் ராமசாமி மற்றும் பலர் உள்ளனர்.